**செ.வெ.எண்: 9** **நாள்:10.11.2022**

## *திருப்பூர் மாநகராட்சியில் உள்ள பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அரசின் வழிகாட்டுதலுடன் தொடர்ந்து மேம்படுத்தப்படும்.*

## *மாநகராட்சி ஆணையாளர் திரு.கிராந்தி குமார் பாடி இஆப., அவர்கள் உறுதி*

---

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம்-4, வார்டு-36, ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கலையரங்கில், இன்று (10.11.2022) **மாநகராட்சி ஆணையாளர் திரு.கிராந்தி குமார் பாடி இஆப., அவர்கள்** ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூரை மற்றும் ரூ. 70,000 மதிப்பீட்டில் தடுப்பு சுவர்களுடன் மறு சீரமைக்கப்பட்ட, 5 வகுப்பறைகளை திறந்து வைத்தார்கள்.

***மாநகராட்சி ஆணையாளர் திரு.கிராந்தி குமார் பாடி இஆப., அவர்கள் பேசியதாவது*:**

திருப்பூர் மாநகராட்சியில் உள்ள ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி திருப்பூர் மாவட்டம் மற்றும் தமிழ்நாட்டுக்கு பெருமைக்குரிய பள்ளியாக விளங்கி வருகிறது இப்பள்ளியில் சிறப்பான கல்வியாளர்கள் ஆண்டுதோறும் அடுத்த நிலைக்கு செல்கின்றனர் இப்பள்ளியில் உள்ள ஐந்து வகுப்பறைகளுக்கு மேற்கூரை அமைக்க ஹச்டிஎப்சி வங்கி நிறுவனத்தாரிடம் கோரிக்கை வைக்கப்பட்ட பொழுது, உடனடியாக அதற்கான ரூ.20 இலட்சம் வழங்கி பணிகளை மேற்கொண்டனர்.

இன்று 3000 சதுர அடி பரப்பளவில் 5 வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 300 மாணவியர்கள் பயன்பெறுவார்கள். தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி முக்கியமான பள்ளியாக உள்ளது. தமிழ்நாடு அரசின் மூலம் "**இல்லம் தேடி கல்வி**" திட்டத்தின் மூலம் வீடுகளுக்கு ஆசிரியர்கள் சென்று கல்வி கற்றுத் தந்து வருகின்றனர். மாணவியர்கள் பள்ளி படிப்பிற்கு பின் மேற்கொள்ள வேண்டிய மேல் படிப்புகள், வேலை வாய்ப்பு குறித்த படிப்புகள் ஆகியவை பற்றி விளக்கமளிக்கும் வகையில்" **நான் முதல்வன் திட்டம்**" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கென பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் மாணவிகளுக்கு பல்வேறு சிறப்பான திட்டங்களை வழங்கி வருகிறார்கள். இந்த திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இந்த பள்ளியிலிருந்து 7 மாணவியர்கள் மருத்துவ படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு செல்கின்றனர். மற்ற மாணவியர்கள் அவர்களை எடுத்துக்காட்டாக கொண்டு நல்ல முறையில் படித்து சிறந்த கல்வியாளர்களாக சமுதாயத்திற்கு வர வேண்டும். தமிழ்நாடு அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மாணவ மாணவியர்கள் தங்கு தடையின்றி கல்வி பயில அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, திருப்பூர் மாநகராட்சியில் உள்ள பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அரசின் வழிகாட்டுதலுடன் தொடர்ந்து மேம்படுத்தப்படும். இங்கு உள்ள அனைத்து மாணவியர்களும் சிறந்த முறையில் கல்வி பயின்று சிறந்த கல்வியாளர்களாகவும், சமுதாய சிந்தனை உள்ளவர்களாகவும் திகழ வாழ்த்துகிறேன் என மாநகராட்சி ஆணையாளர் **திரு.கிராந்தி குமார் பாடி இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, **திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.கிராந்தி குமார் பாடி இ.ஆ.ப., அவர்கள்** ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2020-2021 ஆம் கல்வியாண்டில் மருத்துவப் படிப்பில் சேர்ந்த செல்வி. லாவண்யா.L, செல்வி. காயத்ரி.K, செல்வி. காயத்ரி.S, செல்வி. சுவேதா.R, செல்வி. ரூபித்தா.E, செல்வி. லாவண்யா.J மற்றும் செல்வி. விவேகா யாழினி, ஆகிய 7 மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி, வாழ்த்தினார்.

**இந்நிகழ்வில்,** உதவி ஆணையர் (பொ) திரு.செல்வநாயகம் , ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி.A.ஸ்டெல்லா அமலோற்பவமேரி, உதவி தலைமையாசிரியர் திருமதி.நபிசா பேகம், ஹச்டிஎப்சி வங்கி நிர்வாகிகள் திரு.இராமசந்திரன் கந்தன், திரு.மதனகோபால், திரு.முபாரிஸ், திரு.நரேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி.**

